**இலங்கை பொறியியல் பேரவைம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொறியியல் பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரவையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பேரவையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன்

நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம் மீளாய்வாண்டின் போது கிடைத்திருக்காத போதும் ரூபா 3,730,320 தொகை கிடைக்க வேண்டிய மற்றும் முற்பணப் பெறுவனவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியின் போது, 2020 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற பதிவுக் கட்டணத்தில் உள்ளடங்கியிருந்த பெறுமதி சேர் வரியைக் கணிப்பீடுவதற்காகவும், அந்த பணம் 2019 ஆம் ஆண்டிற்குரிய வருமானமாக இல்லாதிருந்தமையினாலும், அந்த பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்தமையினாலும், 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது பேரவைக்கு பெறுமதி சேர் வரி செலுத்துவதற்கிருந்த தகைமையை இரதுச்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையினாலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. | காலரீதியான எண்ணக்கரு மற்றும் தேறக்கூடிய எண்ணக்கருவின் பிரகாரம் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) அரச மானியமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 3,140,000 தொகையான நிலையான சொத்துக்களின் காலக்கழிவு வருமான மூலத்தின் பிரகாரம் இனங்காணப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய காலக்கழிவு வருமானமாக இனங்காணப்படாமல் காலக்கழிவுப் பெறுமதி நிலையான சொத்துக்களிலிருந்தும், மூலதன மானியத்திலிருந்தும் குறைக்கப்பட்டு கணக்கீட்டுக் | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கைக்கு முரணாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டிற்கான பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் முறையே செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய வரித் தொகை ரூபா 383,682 மற்றும் ரூபா 668,366 ஆக இருந்த போதிலும் உரிய செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய வரி சீராக்கப்படாமல் செலுத்த வேண்டிய வரி மீதி ரூபா 1,548,811 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய வரி ஐந்தொகைத் திகதியின் பின்னர் செலுத்தப்பட்ட வரி அறிக்கையில் உள்ளக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதியொன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 1.5.3 அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பொறியியல் பேரவைக்காக 08 பதவிகளுக்கு 09 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் அங்கீகரிக்கப்படாத 03 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 621,387 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிரந்தர பதவியணிக்கு எந்தவொரு ஊழியரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பொறியியல் பேரவைக்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் திறைசேரி செயலாளரின் 2019 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவனங்களின் சகல ஆட்சேர்த்தல்களையும் தொடர்ந்தும் கைவிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதி பொறியியல் பேரவைக்கான | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளம் செலுத்தாதிருத்தல் வேண்டும். |

அலுவகமொன்று விமர்சையாக திறந்து வைக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஊழியர்கள் சேர்க்கப்படும் வரை சட்டத்தின் 22 ஆவது பிரின் கீழ் பொறியியல் பேரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அலுவலகத்தின் வேலை நடவடிக்கைகளை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் இணைப்பு உத்தியோகத்தர், தகவல் தொழல்நுட்ப இணைப்பு உத்தியோகத்தர் மற்றும் நிதி முகாமையாளர் - பதிற்கடமை உததியோகத்தர் என ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

ஆண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,611,000 மிகையாக இருந்ததுடன் இலங்கை பொறியியல் பேரவையின் ஆரம்ப ஆண்டு மீளாய்வாண்டாகும். அந்த மிகைக்கு பேரவையின் செயற்பாட்டு செலவினங்களுடன் ஒப்பிடும் போது பதிவுக் கட்டண வருமானம் அதிகரித்த பெறுமதியைக் கொண்டிருந்தமை காரணமாக இருந்தது.